**<u>கோயம்புத்தூர் மாநகராட்சி</u>**

**அனுப்புநர்**

**திருமதி. சு. லீலாவதி உண்ணி**
**மேயர் (பொறுப்பு)**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**பெறுநர்**

நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து துறைத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, கவுண்டம்பாளையம்,
கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதிகள்)

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக
வளர்ச்சி, சட்டம், நீதி மன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்,
(தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி)

**<u>ந.க.எண் : 6289 / 2014 / எம்சி. 8 நாள் : 21 .08.2014</u>**

**<u>அய்யா /அம்மா,</u>**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்றக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக்கூட்டம் **25.08.2014 திங்கள்கிழமை காலை 10.15** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் (பொறுப்பு) அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்துத்துறை தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) சு. லீலாவதி உண்ணி**
**மேயர் (பொறுப்பு)**
கோயம்புத்தூர் மாநகராட்சி

**/** உண்மை நகல் /

மாமன்ற செயலளர்

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - ஆகஸ்ட் 2014

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| | **பொருளடக்கம்** |
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| 1 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் –வார்டு எண் 43 வெள்ளகிணறு பகுதியில் துப்புரவு தொழிலாளர் குடியிருப்பு கட்டுதல் பணி மதிப்பீடு ரூ. 75.00 இலட்சம் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 2 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் – வார்டு எண் 1 துடியலூர் தொகுதி–A பகுதியில் துப்புரவு தொழிலாளர் குடியிருப்பு கட்டுதல் பணி பணி மதிப்பீடு ரூ. 75.00 இலட்சம் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 3 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் – வார்டு எண் 1 துடியலூர் தொகுதி–B பகுதியில் துப்புரவு தொழிலாளர் குடியிருப்பு கட்டுதல் பணி பணி மதிப்பீடு ரூ. 75.00 இலட்சம் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 4 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் – வார்டு எண் 1 துடியலூர் தொகுதி–C பகுதியில் துப்புரவு தொழிலாளர் குடியிருப்பு கட்டுதல் பணி பணி மதிப்பீடு ரூ. 75.00 இலட்சம் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 5 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 92 – சுகுணாபுரம் கிழக்கு – கிருஷ்ணா கல்லூர் சாலையில் மஞ்சிபள்ளத்தின் குறுக்காக பாலம் கட்டுதல் பணி – மதிப்பீடு 75.00 இலட்சம் - மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக |
| 6 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 92 - இட்டேரி சாலை சுகுணாபுரம் கிழக்கு – பாலக்காடு சாலை முதல் கிழக்காக மறுதார்தளம் அமைத்தல் பணி - மதிப்பீடு 70.00 இலட்சம் - மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக |
| 7 | பொறியியல் பிரிவு - பொதுப்பணித்துறையின் மூலம் பெறப்பட்ட கட்டிட கட்டுமானம், மராமத்துப் பணிகள் மற்றும் சாலைப் பணிகளுக்கு 2014-2015ம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை – மாமன்றத்தில் பதிவு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | பொறியியில் பிரிவு - மேற்கு மண்டலம் -வார்டு எண் 18 – மாநகராட்சி சமுதாயக் கூடம் வடவள்ளி காவல் நிலையத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – வாடகையை குறைத்து நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 9 | Jnnurm - கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட 8 குளங்களில் முதல்கட்டமாக 4 குளங்களை தூர்வாரி புனரமைத்தல் - தமிழ்நாடு உறுதி செய்யப்பட்ட நகர்புர மேம்பாட்டு திட்டம் மூலம் நிதியுதவி பெற்று மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 10 | Jnnurm – கோயம்புத்தூர் மாநகராட்சி பராமரிப்பில் உள்ள வெள்ளியங்காடு குடிநீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் சுற்றுச்சுவர் மற்றும் காவலர் குடியிருப்பு பணி மேற்கொள்ளுதல் - தி.ள். கே.ஏ.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோவை நிறுவனத்தினருக்கு பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கப்பட்டது - பணியில் முன்னேற்றம் இல்லாதது – மேற்படி நிறுவனத்தினர் செலுத்திய வைப்புத்தொகையை பிடித்தம் செய்தல் மற்றும் கருப்புப் பட்டியலில் சேர்த்தல் - மீதமுள்ள பணியை நடப்பு ஆண்டின் விலை நிர்ணயப்படி மதிப்பீடு செய்து பணி மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 11 | Jnnurm – கோயம்புத்தூர் மாநகராட்சி பராமரிப்பில் உள்ள வெள்ளியங்காடு குடிநீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் பணியாளர் குடியிருப்பு பணி மேற்கொள்ளுதல் - தி.ள். கே.ஏ.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோவை நிறுவனத்தினருக்கு பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கப்பட்டது - பணியில் முன்னேற்றம் இல்லாதது – மேற்படி நிறுவனத்தினர் செலுத்திய வைப்புத்தொகையை பிடித்தம் செய்தல் மற்றும் கருப்புப் பட்டியலில் சேர்த்தல் - மீதமுள்ள பணியை நடப்பு ஆண்டின் விலை நிர்ணயப்படி மதிப்பீடு செய்து பணி மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 12 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.51 பட்டேல் ரோடு மாநகராட்சி வணிக வளாக கடைகள் - மாமன்றத்தில் ஒப்பதல் அளிக்கப்பட்டு உயர்வு செய்யப்பட்ட கடைகளின் வாடகையினை வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறைக்கப்பட்டது – குறைக்கப்பட்ட வாடகைக்கு மாமன்றத்தின் பின்னேற்பு கோருதல் -தொடர்பாக |
| 13 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண் 54 மற்றும் 68 – காலியாக உள்ள மாநகராட்சி கட்டிடங்களை தற்காலிகமாக மாத வாடகை அடிப்படையில் அரசுத் துறைகளுக்கு ஒதுக்கீடு செய்தல் - வாடகையை குறைத்துத்தரக் கோருதல் - மாமன்றத்தின் முடிவிற்கு |
| 14 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.51- சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் மாமிச கடைகளுக்கு பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 15 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 32- விளாங்குறிச்சி காந்தி வீதியில் உள்ள BSNL செல்போன் டவர் அமைந்துள்ள இடத்திற்கு வாடகை உயர்வு செய்து உரிம நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 16 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் -வார்டு எண் 64-வரதராஜபுரம் பிரதான சாலையில் கட்டப்பட்ட மாநகராட்சி வணிக கடைக்கு வாடகை நிர்ணயம் செய்து ஏலம் கோருவதற்கு - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 17 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - மருதமலை அடிவாரம் மேற்கு பகுதி வடக்கு பார்த்த கடை எண் 1 முதல் 9 வரை - மற்றும் வார்டு எண் 24 மேற்கு ஆரோக்கியசாமி சாலையில் வடக்கு பகுதியில் புதியதாக கட்டப்பட்ட கடை எண் 7 , 12 – உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று உரிமம் ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 18 | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – **13.11.2014** முதல் **15.11.2014** முடிய குஜராத்தில் நடைபெறும் Sustainable Build Environment & Good Urban Governance ஆணையாளர் அவர்கள் கலந்து கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோருதல் தொடர்பாக. |
| 19 | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – அக்டோபர் 2014 ல் அகமதாபாத்தில் நடைபெறும் Learn about Planning and design of bus raid transit systems and non motorised Transport facilities ஆணையாளர் அவர்கள் கலந்து கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோருதல் தொடர்பாக. |
| 20 | பொறியியல் பிரிவு - வெள்ளலூர் குப்பை கிடங்கு RAF விடுதிக்கு அருகில் மற்றும் நுழைவாயில் அருகில் சுற்றுச்சுவர் கட்டுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 21 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - நொய்யல் ஆற்றின் பக்கவாட்டில் தடுப்புச்சுவர் கட்டுதல் மற்றும் செல்வபுரம் புறவழிசாலையில் இருந்து தெற்கே நொய்யல் ஆறுவரை தார்சாலை மேம்படுத்துதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 22 | நகரமைப்புப் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – எல்காட் - சிறப்பு பொருளாதார மண்டலம் - விளாங்குறிச்சி கிராமம் க.ச.எண்.426/1, 426/2, 427/1, 436, 437, 438, 439/1, 440, 458/2, 459/2, 461/3, 462/4, 463/4, 465/4, 466/4 – பகுதியில் 61.59 ஏக்கர் - திருத்திய மனைப்பிரிவு உத்தேசம் - பொது ஒதுக்கீடு இடம் பரிவர்த்தனை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 23 | சிக்னல் பராமரிப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – கோவை மாநகரில் உள்ள தானியங்கி சிக்னல்களை பராமரிப்பு செய்ய ஒப்பந்த புள்ளி கோருவதற்கு மாமன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பாக. |

**நன்றியுரை**

**அ) திருக்குறள்**

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

**(குறள் - 611)**

**விளக்கம்**

செய்து முடிப்பதற்கு மிக அரிதானது என்று சோர்வும் தளர்ச்சியும் அடையாது, நம்பிக்கையுடன் விடாது செயலாற்ற முனைந்தால் அவ்வினை வெற்றி அடைந்து பெருமை தரும்.

**திருவள்ளுவர்**

-----------------------------------------------------------------------------

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**<u>சிறப்புத் தீர்மானம் எண் 1</u>**

நேற்றைய தினம் (24.08.2014) மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கோவை மக்களுக்கு கூடுதல் வசதிகளை ஏற்படுத்தித் தரும் வகையில், பழைய நகர்புற சுகாதார மையங்களுக்கு 7.04 கோடி ரூபாயில் புதிய கட்டிடங்கள் 20 புதிய சுகாதார மையங்கள் மற்றும் புதிய நகர்புற சுகாதார மையங்கள் ஏற்படுத்தவும் வெள்ளலூர் பகுதியில் 50 ஏக்கரில் 125 கோடி ரூபாய் மதிப்பில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்கவும், கோவை மாநகருக்கு வெளியில் கட்டமைப்பு வசதிகளுடன் லாரி நிறுத்துமிடம் அமைக்க திட்ட அறிக்கை தயாரிக்கவும், சங்கனூர் பள்ளத்தை சீரமைத்து அதன் இருகரைகளிலும் இலகுரக வாகனங்கள் செல்லும் விதமாக மேட்டுப்பாளையம், சத்தியமங்கலம், அவிநாசி, திருச்சி சாலைகளை இணைத்து அரைவட்ட சாலை அமைக்கவும், கரைகளில் வாழும் மக்களுக்கு மாற்று இடம் வழங்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கவும், காந்திபுரம், ஆர்.எஸ்.புரம் டி.பி. சாலை, மற்றும் டவுன்ஹால் ஆகிய மூன்று இடங்களிலும் பலஅடுக்கு வாகன நிறுத்துமிடங்கள் தனியார் பங்களிப்புடன் அமைக்க திட்ட மதிப்பீடு தயாரிக்கவும், வீடு இல்லாத ஏழைகளுக்கு 443.55 கோடி ரூபாய் மதிப்பில் மாநகராட்சிக்குச் சொந்தமான 20 ஏக்கர் நிலத்தில் 2912 வீடுகள் கட்டித் தரவும், கோவை மாநகரில் அதிகரிக்கும் குடிநீர் தேவையை கருத்தில்கொண்டு மூன்றாவது குடிநீர் திட்டத்தை செயல்படுத்த பெரியகோம்பை மலை மற்றும் கட்டன் மலையில் 100 கோடி ரூபாய் மதிப்பில் தனிக்குகை வழிப்பாதை அமைக்கவும், கோவை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் 1745 கி.மீ. நீளம், மழைநீர் வடிகால் வசதியை படிப்படியாக ஏற்படுத்த 1550 கோடி ரூபாய் மதிப்பில் விரிவான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கவும், கோவை மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை, குடிநீர் பணிகளால் சேதமடைந்த சாலைகளுக்கு 60 கோடி ரூபாய், சுற்றுச்சூழலை பாதுகாக்க, கட்டிட கழிவுகளை மறுசுழற்சி செய்ய 12.80 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் என 2378.39 கோடி ரூபாயில் திட்டங்களை செயல்படுத்த உத்திரவிட்டுள்ளார்கள். அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோயம்புத்தூர் மாநகராட்சி மக்களின் சார்பில் இம்மாமன்றம் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறது. மேலும் இத்திட்டங்களை எல்லாம் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று திட்டங்களை பெற்றுத் தந்த மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி ,சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கு இம்மன்றம் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் (பொ) அவர்களால் கொண்டு வரப்பட்டு கிழக்கு மண்டல தலைவர் திரு. கே.ஆர். ஜெயராம், தெற்கு மண்டல தலைவர் திரு. பெருமாள்சாமி அவர்களால் வழிமொழியப்பட்டது.

**<u>சிறப்புத் தீர்மானம் எண் 1 நாள் 25.08.2014</u>**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**பொருள் எண் 1**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் –வார்டு எண் 43 வெள்ளகிணறு பகுதியில் துப்புரவு தொழிலாளர் குடியிருப்பு கட்டுதல் பணிக்கு ரூ.75,00,000/– மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெற மாமன்றத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு வைப்பது –சம்மந்தமாக

கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் – வார்டு எண் 43 துடியலூர் வெள்ளகிணறு பகுதியில் துப்புரவு தொழிலாளர் குடியிருப்பு கட்டுதல் ரூ.75,00,000/– மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெற மாமன்றத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

மேற்படி பணிக்கான தொகைக்கு 2014–15ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு – ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.05917/2014/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 210 நாள் 25.08.2014**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 2**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் – வார்டு எண் 1 துடியலூர் தொகுதி–A பகுதியில் துப்புரவு தொழிலாளர் குடியிருப்பு கட்டுதல் பணிக்கு ரூ .75,00,000/– மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெற மாமன்றத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு வைப்பது –சம்மந்தமாக

கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் வார்டு எண் 1 துடியலூர் தொகுதி –A பகுதியில் துப்புரவு தொழிலாளர் குடியிருப்பு கட்டுதல் ரூ.75,00,000/– மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெற மாமன்றத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

மேற்படி பணிக்கான தொகைக்கு **2014–15**ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு – ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.**05915/2014**/எம்.டி.**2**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 211 நாள் 25.08.2014**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 3**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் – வார்டு எண் **1** துடியலூர் தொகுதி–B பகுதியில் துப்புரவு தொழிலாளர் குடியிருப்பு கட்டுதல் பணிக்கு .ரூ.**75,00,000/–** மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெற மாமன்றத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு வைப்பது –சம்மந்தமாக

கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் வார்டு எண் **1** துடியலூர் தொகுதி –B பகுதியில் துப்புரவு தொழிலாளர் குடியிருப்பு கட்டுதல் ரூ.**75,00,000/–** மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெற மாமன்றத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

மேற்படி பணிக்கான தொகைக்கு **2014–15**ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு – ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.**05912/2014**/எம்.டி.**2**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 212 நாள் 25.08.2014**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 4**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் – வார்டு எண் **1** துடியலூர் தொகுதி–C பகுதியில் துப்புரவு தொழிலாளர் குடியிருப்பு கட்டுதல் பணிக்கு ரூ.**75,00,000/–** மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெற மாமன்றத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு வைப்பது –சம்மந்தமாக

கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் வார்டு எண் **1** துடியலூர் தொகுதி –C பகுதியில் துப்புரவு தொழிலாளர் குடியிருப்பு கட்டுதல் ரூ.**75,00,000/–** மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெற மாமன்றத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

மேற்படி பணிக்கான தொகைக்கு **2014–15**ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு – ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.**05911/2014**/எம்.டி.**2**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 213 நாள் 25.08.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 5**

கோவை மாநகராட்சி – தெற்கு மண்டலம் - பொறியியல் பிரிவு – வார்டு எண்:92 சுகுணாபுரம் கிழக்கு பகுதியில் கிருஷ்ணா கல்லூரி சாலையில் மஞ்சிபள்ளத்தின் குறுக்காக பாலம் கட்டுதல் பணிக்கென தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.**75,00,000/-**த்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல்.

மேற்படி சாலை, சிற்றுந்துகள் செல்லும் பிரதான வழித்தட சாலையாகும். இதில் தற்போது தரைமட்டத்தில் இருந்து தாழ்வாக குழாய் பாலம் மட்டுமே உள்ளது. இதனால் மழைவெள்ள காலங்களில் சாலையின் மேல் வெள்ளம் செல்வதால் பள்ளத்தினை கடக்க முடியாமல் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகிறார்கள். எனவே அவசரம் அவசியம் கருதி மேற்படி பகுதியில் உயர்மட்ட பாலம் அமைக்க அவசியமாகிறது.

மேற்படி பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.**5643/2014**/எம்டி**4**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 214 நாள் 25.08.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 6**

கோவை மாநகராட்சி – தெற்கு மண்டலம் - பொறியியல் பிரிவு – வார்டு எண்:92 இட்டேரி சாலையில் (சுகுணாபுரம் கிழக்கு) பாலக்காடு சாலை முதல் கிழக்காக மறுதார்தளம் அமைத்தல் பணிக்கென தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.70,00,000/-த்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல்.

மேற்படி சாலை, கல்லூரி வாகனங்கள் மற்றும் சிற்றுந்துகள் செல்லும் பிரதான சாலையாகும். தற்போது மிகவும் பழுதடைந்து குண்டும் குழியுமாக உள்ளதால் மறுதார்தளம் அமைக்க வார்டு மாமன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் கோரி வருகின்றனர்.

மேற்படி பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.5644/2014/எம்டி4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 215 நாள் 25.08.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 7**

கோவை மாநகராட்சி – பொறியியல் பிரிவில் கட்டிட கட்டுமானம், மராமத்து பணிகள் போன்றவற்றிற்கு விலை விபர அட்டவணை தயாரிக்க தமிழ்நாடு பொதுப்பணித்துறை முதன்மைப் பொறியாளர், சென்னை அவர்களின் அனுமதி எண் HDO(A) (PWD)/23824/2014-1 Dated 01-07-2014-ல் அனுமதி வழங்கப்பட்ட விலை விபர அட்டவணை பெறப்பட்டுள்ளது. 2014-2015ம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை 01-07-2014 முதல் நடைமுறைப்படுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று தமிழ்நாடு நெடுஞ்சாலை துறையின்மூலம் சாலைப் பணிகளுக்கும் 2014-2015-ம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை நெடுஞ்சாலை உத்திரவு எண்.4069/TECHNICAL CELL/2014 Dated 01-07-2014-ன் படி அனுமதிக்கப்பட்ட தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை பெறப்பட்டுள்ளது. இவ்விலை விபர அட்டவணை 01-07-2014 முதல் நடைமுறைப்படுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெறப்பட்ட 2014-2015-ம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணையை இம்மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த பெறப்பட்ட தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணையை மாமன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 6831 /2014/TA

**மாநகர மன்ற தீர்மானம் எண் 216 நாள் 25.08.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 8**

பார்வை :

1. காவல் துறை கண்காணிப்பாளர் பேரூர் உட்கோட்டம் அவர்களது கடிதம் நாள்.10.07.2014
2. மாமன்ற தீர்மான எண். 151 நாள். 16.07.2014
3. காவல் ஆய்வாளர் வடவள்ளி காவல் நிலையம் அவர்களது கடிதம் நாள். 05.08.2014

*******

பார்வை 2-ல் கண்டுள்ள மாமன்ற தீர்மானத்தின்படி, மேற்கு மண்டலம் வார்டு எண். 18, மாநகராட்சி சமுதாயக் கூடத்தை வடவள்ளி காவல் நிலையத்திற்கு அரசு வழிகாட்டி மதிப்பின்படி ரூ.23,590/-ஐ மாதாந்திர வாடகையாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சமுதாயக் கூடத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை ரூ.23,590/-ஐ குறைப்பது குறித்து பார்வை 3-ல் காணும் வடவள்ளி காவல் நிலைய ஆய்வாளரிடமிருந்து கோரிக்கைக் கடிதம் பெறப்பட்டுள்ளது. காவல் நிலையம் அரசு துறை என்பதால் மாத வாடகை தொகை ரூ.23,590/-லிருந்து குறைத்து நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு எண். 105 நாள். 28.08.2014-ன் படி அரசு துறை என்பதால் மாதவாடகை ரூ.10,000/- என நிர்ணயம் செய்து மாமன்றத்திற்கு பரித்துறை செய்து தீர்மானிக்கப்பட்டது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.4791/2014/D3(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 217 நாள் 25.08.2014**

வார்டு எண் 18 என்பதற்கு பதிலாக வார்டு எண் 17 என திருத்தம் செய்து பொருள் அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 9**

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் பொதுப்பணித்துறை பராமரிப்பில் இருந்த கீழ்க்கண்ட (8) எட்டு நீர்நிலைகளையும் குடியிருப்பு ஆக்கிரமிப்புகள் அதிகளவில் உருவாகிவிட்டதாலும், நீண்ட காலமாக நீர்நிலைகள் தகுந்த பராமரிப்பின்றி இருந்து வந்ததாலும் நீர்நிலைகளின் கரைகள் முட்புதர்கள் படர்ந்து கரைகள் சேதமடைந்த நிலையில் இருப்பதால் எட்டு நீர்நிலைகளையும் முழுமையாக தூர்வாரி, கரைகளை மேம்படுத்தி நீர்நிலைகளில் சேரும் கழிவுநீரினை சுத்தப்படுத்தி நீர்நிலைகளில் விடவும், மழைகாலங்களில் பெறப்படும் மழைநீரினை நீர்நிலைகளில் சேமித்து நிலத்தடி நீரினை அதிகரிக்கும் வகையில் நீர்நிலைகளை புனரமைத்து சீரமைக்கும் பணியை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடு தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனமான தி/ள். ஆப்ரோ, பெங்களூர் என்ற நிறுவனம் மூலமாக தயாரிக்கப்பட்டது.

1. நரசம்பதி குளம்
2. கிருஷ்ணம்பதி குளம்
3. செல்வம்பதி குளம்
4. குமாரசாமி / முத்தண்ணன் குளம்
5. செல்வ சிந்தாமணி குளம்
6. பெரிய குளம்
7. வாலாங்குளம்
8. சிங்காநல்லூர் குளம்

இப்பணிகளை மத்திய, மாநில அரசு மானிய நிதி உதவியுடன் மாநகராட்சி பங்கு நிதியும் செலவழித்து பணியினை மேற்கொள்ளும் பொருட்டு இருப்பதால், பொதுப்பணித்துறை வசம் உள்ள மேற்படி நீர்நிலைகளை மாநகராட்சி வசம் ஒரு குளத்திற்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ. 100/– வீதம் நீண்ட கால குத்தகை அடிப்படையில் குளத்தினை ஒப்படைக்க அரசு ஆணை எண். 257, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை, நாள் 29.13.09–ல் ஆணை வழங்கப்பட்டு, கடந்த 28.01.2010 அன்று மேற்படி குளங்கள் மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது.

எனவே, மாநகராட்சி பகுதிகளில் உள்ள மேற்கண்ட 8 (எட்டு) நிர்நிலைகளை சுற்றுப்புற சூழல் மற்றும் நீர்வளங்களின் இயற்கை தன்மை மாறாமல் நீர்நிலைகளை தூர்வாரி, கரைகளை பலப்படுத்துவதன் மூலம் நீர்த்தேக்கும் கொள்ளளவு திறனை அதிகரித்தல், நீர்நிலைகளின் கரைகளில் நடைபாதைகள் மற்றும் பூங்காக்கள் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு புனரமைக்கும் பணிக்கு ரூ. 200.00 கோடி மதிப்பில் (2012–2013–ம் ஆண்டிற்கான பொதுப்பணித்துறையின் தரப்படுத்தப்பட்ட விலை அட்டவணையின்படி) தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடுகளுடன் கூடிய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. தற்போது 2013–2014ம் ஆண்டின் தரப்படுத்தப்பட்ட விலை அட்டவணையின்படி திருத்திய விரிவான திட்ட அறிக்கை ரூ. 232.00 கோடி மதிப்பில் தயாரிக்கப்பட்டு, அரசின் நிதி உதவி பெறும் பொருட்டு வெவ்வேறு அரசுதுறைகளுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இதில் கீழ்க்கண்ட முதல் நான்கு குளங்களுக்கான திட்ட மதிப்பீட்டுத் தொகையினை தமிழ்நாடு உறுதிசெய்யப்பட்ட நகர்புர மேம்பாட்டு திட்டம் (TNSUDP) மூலம் மேற்கொள்ளப்பட திட்ட பிரேரனை தயாரிக்கப்பட்டுள்ளது.

1. நரசம்பதி குளம் – ரூ. 995.00 லட்சம்
2. கிருஷ்ணம்பதி குளம் – ரூ. 332.50 லட்சம்
3. செல்வம்பதி குளம் – ரூ. 770.00 லட்சம்
4. குமாரசாமி குளம் – ரூ. 850.00 லட்சம்

தமிழ்நாடு உறுதிசெய்யப்பட்ட நகர்புர மேம்பாட்டு திட்ட நிதி பகிர்மானமாக (Funding pattern) கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ.எண் | நிதி நிறுவனத்தின் பெயர் | நிதி பங்கீடு சதவீதம் |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு உறுதிபடுத்தப்பட்ட நகர்புர மேம்பாட்டு திட்ட கடன் | 60 % |
| 2 | தமிழ்நாடு உறுதிபடுத்தப்பட்ட நகர்புர மேம்பாட்டு திட்ட மானியம் | 30 % |
| 3 | மாநகராட்சி பங்கு | 10 % |

மேற்படி நிதி நிறுவனத்தின் நிதிபங்கீட்டின்படி மூன்று குளங்களையும் முதல் கட்டமாக முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்து குளங்களை தூர்வாரி, கரைகளை பலப்படுத்தி, புனரமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு மேற்படி நிதி நிறுவனம் மூலம் அரசு அனுமதி பெற பிரேரனைகள் அனுப்ப அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 13090/06/ஜே.என்5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 218 நாள் 25.08.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 10**

கோயம்புத்தூர் மாநகராட்சி பராமரிப்பில் உள்ள வெள்ளியங்காடு 125 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தினுள் மாநகராட்சி உட்கட்டமைப்பு நிதி பற்றாக்குறை நிவர்த்தி செய்யும் நிதி 2009 – 10 திட்டத்தின் கீழ் ரூ. 74 லட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் மற்றும் காவலர் குடியிருப்பு பணி எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தி/ள். கே.ஏ.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோவை அவர்கள் 15.12.2010–ல் கொடுத்த குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று 16.05.2011–ல் பணியினை ஆறு மாதத்தில் செய்து முடிக்கும்படி பணி உத்தரவு வழங்கப்பட்டது. பணி ஒப்பந்தத்தின்படி மேற்படி பணி 15.11.2011–க்குள் செய்து முடித்திருக்க வேண்டும். ஆனால் சுற்றுச்சுவர் மொத்தம் உள்ள 1020 மீட்டர் நீளத்தில் 650 மீட்டர் மட்டுமே முடிக்கப்பட்டுள்ளது. மேலும் காவலர் குடியிருப்பு தரைத்தளம், முதல் தளம் கான்கிரீட் கூரை மட்டும் வேயப்பட்டுள்ளது. மற்ற பணிகள் எதுவும் நடைபெறவில்லை. மேற்படி பணி செய்து முடிக்கும்படி ஒப்பந்ததாரருக்கு அறிவிப்புக் கடிதம் மற்றும் அபராதம் விதித்தும் கடிதம் அனுப்பப்பட்டது. இதற்கு பின்பும் பணியில் முன்னேற்றம் இல்லாததால் 07.08.2013–ல் இறுதி அறிவிப்பு (Final Show Cause Notice) ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டும் பணியில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. மேலும் 15.05.2014–ம் தேதிய இறுதி அறிவிப்பில் ரூ. 1,00,000/– அபராதம் விதித்தும் பணியினை செய்து முடிக்கும்படியும் தவறும் பட்சத்தில் தங்களிடம் விளக்கம் பெற ஏதும் இல்லை என கருதி, ஒப்பந்தத்தை ரத்து செய்து கறுப்பு பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மேற்படி பணி செய்து முடிப்பதில் ஏற்படும் சகல நஷ்டங்களையும் தங்களிடமிருந்து வசூலிக்கப்படும் என ஒப்பந்ததாரருக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரை மேற்படி பணி செய்து முடிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் அரசுக்கு பணி முடிவு அறிக்கை, பயனீட்டு சான்று அனுப்ப முடியவில்லை. இதனால் மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்பட வாய்ப்பாக உள்ளது. எனவே, ஒப்பந்ததாரருக்கு கொடுத்த ஒப்பந்தத்தை ரத்து செய்யவும், இப்பணிக்கு செலுத்திய வைப்புத் தொகை பிடித்தம் செய்து பொது நிதியில் வரவு வைக்கவும், இவர் பெயரை கறுப்பு பட்டியலில் சேர்க்கவும், மீதமுள்ள பணியினை நடப்பு ஆண்டு (2014–15) விலை நிர்ணய பட்டியல்படி மதிப்பீடு செய்து பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u> தி/ள். கே.ஏ.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோவை நிறுவனம் இப்பணிக்கு செலுத்திய வைப்புத் தொகை பிடித்தம் செய்து பொது நிதியில் வரவு வைக்கவும், இவர் பெயரை கறுப்பு பட்டியலில் சேர்க்கவும், மீதமுள்ள பணியினை நடப்பு ஆண்டு (2014–15) விலை நிர்ணய பட்டியல்படி மதிப்பீடு செய்து பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். CE/CBE/ER-1/10-11/JN5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 219 நாள் 25.08.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 11**

கோயம்புத்தூர் மாநகராட்சி பராமரிப்பில் உள்ள வெள்ளியங்காடு 125 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தினுள் மாநகராட்சி உட்கட்டமைப்பு நிதி பற்றாக்குறை நிவர்த்தி செய்யும் நிதி 2009 – 10 திட்டத்தின் கீழ் ரூ. 75 லட்சம் மதிப்பீட்டில் பணியாளர்குடியிருப்பு பணி எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தி/ள். கே.ஏ.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோவை அவர்கள் 15.12.2010–ல் கொடுத்த குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று 16.05.2011–ல் பணியினை ஒன்பது மாதத்தில் செய்து முடிக்கும்படி பணி உத்தரவு வழங்கப்பட்டது. பணி ஒப்பந்தத்தின்படி மேற்படி பணி 15.02.2012–க்குள் செய்து முடித்திருக்க வேண்டும். ஆனால் மேற்படி பணி Basement level – லேயே உள்ளது. மேற்படி பணி செய்து முடிக்கும்படி ஒப்பந்ததாரருக்கு அறிவிப்புக் கடிதம் மற்றும் அபராதம் விதித்தும் கடிதம் அனுப்பப்பட்டது. இதற்கு பின்பும் பணியில் முன்னேற்றம் இல்லாததால் 07.08.2013–ல் இறுதி அறிவிப்பு (Final Show Cause Notice) ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டும் பணியில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. மேலும் 15.05.2014–ம் தேதிய இறுதி அறிவிப்பில் ரூ. 1,00,000/– அபராதம் விதித்தும் பணியினை செய்து முடிக்கும்படியும் தவறும் பட்சத்தில் தங்களிடம் விளக்கம் பெற ஏதும் இல்லை என கருதி, ஒப்பந்தத்தை ரத்து செய்து கறுப்பு பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மேற்படி பணி செய்து முடிப்பதில் ஏற்படும் சகல நஷ்டங்களையும் தங்களிடமிருந்து வசூலிக்கப்படும் என ஒப்பந்ததாரருக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரை மேற்படி பணி செய்து முடிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் அரசுக்கு பணி முடிவு அறிக்கை, பயனீட்டு சான்று அனுப்ப முடியவில்லை. இதனால் மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்பட வாய்ப்பாக உள்ளது.

எனவே, ஒப்பந்ததாரருக்கு கொடுத்த ஒப்பந்தத்தை ரத்து செய்யவும், இப்பணிக்கு செலுத்திய வைப்புத் தொகை பிடித்தம் செய்து பொது நிதியில் வரவு வைக்கவும், இவர் பெயரை கறுப்பு பட்டியலில் சேர்க்கவும், மீதமுள்ள பணியினை நடப்பு ஆண்டு **(2014–15)** விலை நிர்ணய பட்டியல்படி மதிப்பீடு செய்து பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** திி/ள். கே.ஏ.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோவை நிறுவனம் இப்பணிக்கு செலுத்திய வைப்புத் தொகை பிடித்தம் செய்து பொது நிதியில் வரவு வைக்கவும், இவர் பெயரை கறுப்பு பட்டியலில் சேர்க்கவும், மீதமுள்ள பணியினை நடப்பு ஆண்டு **(2014–15)** விலை நிர்ணய பட்டியல்படி மதிப்பீடு செய்து பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். CE/CBE/ER-2/10-11/JN5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 220 நாள் 25.08.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 12

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - வார்டு எண்.51 பட்டேல் ரோடு மாநகராட்சி வணிக வளாக கடைகள் - மாமன்றத்தில் ஒப்பதல் அளிக்கப்பட்டு உயர்வு செய்யப்பட்ட கடைகளின் வாடகையினை குறைப்பது - தொடர்பாக .

பார்வை : 1.மாநகர மன்ற தீர்மான எண்.390 நாள். 22.02.2013.
2.வணக்கத்துக்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி நாள்.06.01.2014.

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.51 பட்டேல்ரோடு மாநகராட்சி வணிகவளாக கடைகளுக்கு பார்வை 1-ல் காணும் மாமன்ற தீர்மான எண்.390 நாள் 22.02.2013-ல் பொதுப் பணித்துறை மதிப்பீட்டின்படி 01.04.2013 முதல் உயர்வு செய்யப்பட்ட வாடகையினை கடை உரிமதாரர்கள் குறைக்க கோரியதின் பேரில் பார்வை 2-ல் காணும் வணக்கத்துக்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று கீழ்கண்டவாறு கடைகளுக்கு வாடகை குறைக்கப்பட்டது.

| வ. எண் | வரிவிதிப்பு எண். | கடை எண். | பெயர் | மாமன்ற தீர்மான எண்.390, 22.02.2013-ன் படி 01.04.2013 முதல் மூன்று வருடங்களுக்கு உயர்வு செய்யப்பட்ட வாடகை. ரூ | 10 சதவீதம் குறைக்கப்பட்ட பின் வாடகை ரூ, |
|---|---|---|---|---|---|
| 1 | 40002 | 2 | கே.கந்தசாமி | 6980 | 6282 |
| 2 | 40003 | 3 | கே.கந்தசாமி | 6980 | 6282 |
| 3 | 40004 | 4 | ஆர்.சுப்பிரமணி | 6980 | 6282 |
| 4 | 40005 | 5 | ஆர்.சண்முக சுந்தரம் | 6980 | 6282 |
| 5 | 40006 | 6 | என்.தேவராஜன் | 6980 | 6282 |
| 6 | 40007 | 7 | மணி | 6980 | 6282 |
| 7 | 40008 | 8 | பிரேம் ஆனந் | 6980 | 6282 |
| 8 | 40009 | 9 | பிரேம் ஆனந் | 6980 | 6282 |
| 9 | 40010 | 10 | கிருஷ்ணமாச்சரி | 6980 | 6282 |
| 10 | 40011 | 11 | அன்வர் மொய்தீன்புலவனார் | 6980 | 6282 |
| 11 | 40012 | 12 | எம்.ஜெ.ஜான் | 6980 | 6282 |
| 12 | 40013 | 13 | ஷேக் முஜிபூர் ரஹ்மான் | 6980 | 6282 |
| 13 | 40014 | 14 | கே.கந்தசாமி | 6980 | 6282 |
| 14 | 40015 | 15 | எ.எஸ்.தூயமணி | 6980 | 6282 |
| 15 | 40016 | 16 | வீ.வெங்கடேஷ் | 6980 | 6282 |
| 16 | 40017 | 17 | அமீர்மொய்தீன் புலவனார் | 6980 | 6282 |
| 17 | 40018 | 18 | எஸ்.டி.குதீர் ஆலம் | 6980 | 6282 |
| 18 | 40019 | 19 | ஆர்.தண்டபாணி | 6980 | 6282 |
| 19 | 40020 | 20 | பி.பழனிசாமி | 6980 | 6282 |
| 20 | 40021 | 21 | எஸ்.பி.ரவீந்தரன் | 6980 | 6282 |
| 21 | 40022 | 22 | எஸ்.பி.ஆனந்தன் | 6980 | 6282 |
| 22 | 40023 | 23 | எ.சக்திவேல் | 6980 | 6282 |
| 23 | 40024 | 24 | ஆர்.எம்.நாராயணன் | 6980 | 6282 |
| 24 | 40025 | 25 | எம்.எஸ்.திருமலைசாமி | 6980 | 6282 |
| 25 | 40027 | 27 | சி.சரோஜினி | 6980 | 6282 |

வணக்கத்துக்குரிய மேயா் அவா்களின் முன் அனுமதி பெற்று வாா்டு எண்.51 பட்டேல் ரோட்டியில் உள்ள மாநகராட்சி வணிகவளாக கடைகளுக்கு குறைக்கப்பட்ட வாடகைக்கு பின்னேற்பு வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.10119/2012/அ1 (ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 221 நாள் 25.08.2014**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 13

பொருள் கோயம்புத்தூா் மாநகராட்சி மத்திய மண்டலம் வாா்டு 54 மற்றும் 68-ல் காலியாக உள்ள மாநகராட்சி கட்டிடங்களை தற்காலிகமாக மாதவாடகை அடிப்படையில் அரசுத்துறைகளுக்கு ஒதுக்கீடு செய்வது தொடா்பாக.

பாா்வை 1.வணக்கத்திற்குரிய மேயா் அவா்களின் முன் அனுமதி நாள் 04.03.14
2.ஆணையாளா் அவா்களின் உத்திரவு நாள்.30.06.2014.
3.சம்பந்தப்பட்ட அலுவலகங்களிலிருந்து பெறப்பட்ட கோரிக்கை கடித நாள். 31.07.2013 மற்றும் 12.06.2014
4.மாமன்ற தீா்மான எண்.393 நாள்.17.02.2014

--------

பாா்வை 1-ல் காணும் வணக்கத்திற்குரிய மேயா் அவா்களின் முன் அனுமதிப்படி கோயம்புத்தூா் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ் கண்ட காலியாக உள்ள மாநகராட்சி கட்டிடங்களை அலுவகங்களை தற்காலிகமாக அரசு அலுவலகங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட வாா்டு பொறியாளா்களிடம் பொதுப்பணித்துறை வாடகை மதிப்பீடு அடிப்படையில் மாத வாடகை நிா்ணயம் செய்யப்பட்டது.

| வ. எண் | ஒதுக்கீடு செய்யப்பட்ட அமைவிடம் மற்றும் அலுவலகங்கள் | அளவு | பொதுப்பணித்துறை மதிப்பீட்டின் படி நிா்ணயிக்கப்பட்ட மாதவாடகை (ரூ.136.13 ச.அ) |
|---|---|---|---|
| 1 | வாா்டு எண்.68 இராமநாதபுரம் 80அடிசாலையிலுள்ள மாநகராட்சி ஆரம்பபள்ளிக்கு அருகில் உள்ள சத்துணவு மையத்தின் மேல் மாடியில் தென்புறம் காலியாக உள்ள இடம்<br><br>மாவட்ட திட்ட அலுவலா் ஒருங்கிணைந்த குழந்தை வளா்ச்சி பணி அலுவலகம். | 1050 சதுரடி | 1,42,937/- |
| 2 | வாா்டு எண்.68 இராமநாதபுரம் 80அடிசாலையிலுள்ள மாநகராட்சி ஆரம்ப பள்ளிக்கு அருகில் உள்ள சத்துணவு மையத்தின் மேல் மாடியில் வடபுறம் காலியாக உள்ள இடம்<br><br>மாவட்ட ஆட்சியரின் நோ்முக உதவியாளா் (சத்துணவு) அலுவலகம் | 1050 சதுரடி | 1,42,937/- |

| வ. எண் | ஒதுக்கீடு செய்யப்பட்ட அமைவிடம் மற்றும் அலுவலகங்கள் | அளவு | பொதுப்பணித்துறை மதிப்பீட்டின் படி நிா்ணயிக்கப்பட்ட மாதவாடகை (ரூ.39.23 ச.அ) |
|---|---|---|---|
| 3 | வாா்டு 54 ரங்கநாதபுரம் மாநகராட்சி ஆரம்ப பள்ளியில் (தெற்கு பகுதி) காலியாக உள்ள இடம்<br>கோவை மாவட்டம் காவல் துறை கண்காணிப்பாளா் அலுவலகம். | 13058.55 சதுரடி | 5,12,287/- |

பாா்வை 2-ல் காணும் ஆணையாளா் அவா்களின் உத்திரவின் பேரில் வாா்டு எண்.68 இராமநாதபுரம் 80அடிசாலையிலுள்ள ஆரம்ப பள்ளிக்கு அருகிலுள்ள சத்துணவு மையத்திலுள்ள கீழ்கண்ட அலுவலங்களுக்கு வாடகை மறு நிா்ணயம் செய்யப்பட்டது.

| வ. எண் | ஒதுக்கீடு செய்யப்பட்ட அமைவிடம் மற்றும் அலுவலகங்கள் | அளவு | மறு மதிப்பீட்டின் படி நிர்ணியிக்கப்பட்ட மாதவாடகை (ரூ.63 ச.அ) |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.68 இராமநாதபுரம் 80அடிசாலையிலுள்ள மாநகராட்சி ஆரம்பபள்ளிக்கு அருகில் உள்ள சத்துணவு மையத்தின் மேல் மாடியில் தென்புறம் காலியாக உள்ள இடம்<br><br>மாவட்ட திட்ட அலுவலா் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணி அலுவலகம். | 1050 சதுரடி | 66,150/- |
| 2 | வார்டு எண்.68 இராமநாதபுரம் 80அடிசாலையிலுள்ள மாநகராட்சி ஆரம்பபள்ளிக்கு அருகில் உள்ள சத்துணவு மையத்தின் மேல் மாடியில் வடபுறம் காலியாக உள்ள இடம்<br>மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) அலுவலகம் | 1050 சதுரடி | 66,150/- |

பார்வை 3-ல் காணும் காவல் கண்காணிப்பாளர் கடிதத்தின்படி வார்டு 54 ரங்கநாதபுரம் மாநகராட்சி ஆரம்ப பள்ளியில் (தெற்கு பகுதி) காலியாக உள்ள 13058.55 சதுரடி இடத்திற்கு ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை ரூ.5,12,287/-யினை மறு நிர்ணயம் செய்ய தர கோரியுள்ளார்கள்.

பார்வை 4-ல் காணும் மாமன்றத்தில் பொதுப்பணித்துறை வாடகை மதிப்பீட்டில் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையில் குற்றவியல் அலுவலகம், உதவி இயக்குநர் பேரூராட்சிகள், தமிழ் வளர்ச்சி கழகம் மற்றும் மாவட்ட ஊராட்சி மற்றும் மாவட்ட திட்ட குழு அலுவலகங்கள் ஆகியவற்றிக்கு அரசு அலுவலகங்கள் என்பதால் 50 சதவீதம் குறைத்து மாத வாடகை நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டது.

எனவே மேற்குறிப்பிட்டுள்ள அரசு அலுவலகங்களுக்கு அவர்களது விண்ணப்ப கடிதத்தின்படி பொறியாளர் மதிப்பீட்டில் வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டியும் அரசு அலுவலங்கள் என்பதால் வாடகையினை குறைத்து தர கோரியதை மறு பரிசீலனை செய்வது குறித்தும் மாமான்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மாமன்றத்தின் முடிவுக்கு ந.க..எண் 12339/13/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 222 நாள் 25.08.2014**

பொருளுக்கு பின்னேற்பு வழங்கியும், வரிசை எண் 1-ல் குறிப்பிட்டுள்ள மாவட்ட திட்ட அலுவலா் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணி அலுவலகம், அரசு அலுவலகமாக இருப்பதால் மாத வாடகை ரூ. 66,150/- எனவும், வரிசை எண் 2-ல் குறிப்பிட்டுள்ள மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) அலுவலகம், அரசு அலுவலகமாக இருப்பதால் மாத வாடகையாக ரூ. 66,150/- எனவும் நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 14**

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்டபட்ட மாதாந்திர வாடகை கடைகளுக்கு 13.08.2014-ன் அன்று நடைபெற்ற ஏலத்தில் வார்டு எண்.51-ல் சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் மாமிச கடைகளுக்கு பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படை செய்வது – தொடர்பாக |
| பார்வை | வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண.108 நாள்.20.08.2014 |

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 13.08.2014-ம் தேதி மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ.எண் | இனம் | 13.08.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரா் பெயா |
|---|---|---|
| 1. | சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் மாமிச கடை எண். 6(ஒரு கடை)<br>அரசு நிர்ணய மதிப்பீடு ரூ.975/- | ரூ.980/-<br>திரு.P.செல்வுராஜ்<br>(ஒப்பந்தப்புள்ளி) |
| 2 | சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் மாமிச கடை எண்.8 மற்றும் 9 (இரண்டு கடைகள்)<br>அரசு நிர்ணய மதிப்பீடு ரூ.975/- | ரூ.980/-<br>(ஒவ்வொரு கடைக்கும்)<br>திரு.B.அப்துல் ராஹுமான்<br>(ஒப்பந்தப்புள்ளி) |
| 3 | சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் மாமிச கடை எண்.10 மற்றும் 11 (இரண்டு கடைகள்)<br>அரசு நிர்ணய மதிப்பீடு ரூ.975/- | ரூ.980/-<br>(ஒவ்வொரு கடைக்கும்)<br>திரு.M.முனியான்டி<br>(ஒப்பந்தப்புள்ளி) |

| | | |
|---|---|---|
| 4 | சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் மாமிச கடை எண்.14 மற்றும் 15 (இரண்டு கடைகள்) அரசு நிர்ணய மதிப்பீடு ரூ.975/- | ரூ.985/- திரு.K.R,ராஜா (ஒப்பந்தப்புள்ளி) |
| 5 | சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் மாமிச கடை எண்.20 (ஒரு கடை) அரசு நிர்ணய மதிப்பீடு ரூ.975/- | ரூ.980/- திரு.M.ஸ்டிபன் (ஒப்பந்தப்புள்ளி) |

மேற்குறிப்பிட்டுள்ள இனத்திற்கு பல நடைபெற்ற ஏலத்தில் ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை மேலும் 13.08.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் அரசு மதிப்பைக் காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே இவ்வினங்களை (வரிசை எண்.1முதல் 5 வரை) ஒப்படைசெய்ய அனுமதி வேண்டி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.108 நாள்.20.08.2014-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.9659/13/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 223 நாள் 25.08.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 15

பொருள் : உரிமம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - வார்டு எண் 32-ல் விளாங்குறிச்சி காந்தி வீதியில் உள்ள BSNL செல்போன் டவர் அமைந்துள்ள இடத்திற்கு வாடகை உயர்வு செய்து உரிம நீட்டிப்பு வழங்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரைக்கு மாமன்றத்தின் ஒப்புதல் - வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை : 1.துணை ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள் :02.03.2012.
2.பொது மேலாளர், BSNL கடிதம் எண் 13765/2009-15/ 15, நாள் 9.07.2014.
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்:111, நாள் : 20.08.2014.

-----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டு கிழக்கு மண்டலத்தில் 25.10.2011 முதல் விளாங்குறிச்சி கிராமப்பஞ்சாயத்து பகுதி இணைக்கப்பட்டு மாநகராட்சியாக செயல்பட்டு வருகின்றது. இதே பகுதி காந்தி வீதியில் உள்ள மாநகராட்சி காலியிடத்தில் BSNL செல்போன் டவர் அமைக்க விளாங்குறிச்சி பஞ்சாயத்து மூலம் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மேற்படி பகுதி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டவுடன் பார்வையில் காணும் துணை ஆணையாளர் அவர்களின் உத்திரவின்படி 01.10.2009 முதல் மாத வாடகை ரூ.4500/- நிர்ணயம் செய்யப்பட்டு 5 வருடங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டது. மேற்படி உரிமக்காலம் 30.09.2014 உடன் முடிவடைவதால் வாடகை உயர்வு செய்து 5 வருடத்திற்கு உரிம நீட்டிப்பு வழங்க BSNL நிறுவனம் பார்வை (2)-ல் காணும் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. எனவே 01.10.2014 முதல் 15% மாத வாடகை உயர்வு செய்து புதிய வாடகை ரூ.5175/- என நிர்ணயம் செய்தும் 01.10.2014 முதல் 31.03.2019 வரை 5 வருடங்களுக்கு உரிம நீட்டிப்பு வழங்கவும், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 111, நாள் 20.08.2014-ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேற்படி பரிந்துரையை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது..

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்:6403/2014/கி அ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 224 நாள் 25.08.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 16

பொருள் : உரிமம் - கோயம்புத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம் வார்டு எண் 64- வரதராஜபுரம் பிரதான சாலையில் மாநகராட்சி வணிக கடை ஒன்று கட்டப்பட்டு உள்ளது வாடகை நிர்ணயம் செய்வது – ஏலம் கோருவதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரைக்கு மாமன்றத்தின் ஒப்புதல் - வேண்டுதல் - தொடர்பாக

0பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்:110, நாள்:20.08.2014

--------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 64-ற்குட்பட்ட வரதராஜபுரம் பிரதான சாலையில் மாநகராட்சி வணிக கடை ஒன்று 255 சதுர அடி அளவில் கட்டப்பட்டு ஏலம் விட தயார் நிலையில் உள்ளது. மேற்படி கடைக்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி கடைக்கு மாதாந்திர வாடகை ரூ 5,200/- என நிர்ணயம் செய்து, ஏலம் கோருவதற்கும் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் கீழ்க்கண்டவாறு ஏல வைப்புத்தொகைகளை

| வைப்புத் தொகை ரூபாயில் | காப்புத் தொகை ரூபாயில் | வங்கி உறுதிச்சான்று | வங்கி உறுதிச்சான்று அல்லது செலுத்த வேண்டிய தொகை ரூபாயில் |
|---|---|---|---|
| 1,00,000 | 75,000 | 1,50,000 | 75,000 |

நிர்ணயம் செய்யவும், மேற்படி கடையை ஏலம் கோருவதற்கும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு எண் 110, நாள் 20.08.2014-ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேற்படி பரிந்துரையை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் :7466 /2014/கி அ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 225 நாள் 25.08.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 17**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் - மாதந்திர வணிகவளாகங்கள் 2014-17-க்கான - பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 13.08.2014-ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - தொடர்பாக.

பார்வை: பொதுமறுமின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள். 13.08.2014

*****

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், 2014-17 மாதந்திர வணிகவளாகங்கள் இனங்களுக்கான பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 13.08.2014-ம் தேதியன்று நடைபெற்றது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் வரப்பெற்ற விபரங்கள் கீழ்கண்டவாறு

ஏலம் நடைபெற்ற தேதி – 13.08.2014

வணிகவளாக கடைகள்

| வ. எண். | வணிக வளாகங்கள் | கடந்த ஏல உயர்ந்தப்பட்ச கோரிக்கை .ரூ | ஏலதாரர் பெயர் | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| 1. | மருதமலை அடிவாரம் மேற்கு பகுதி வடக்கு பார்த்த கடை எண்.1 முதல் 9 வரை தலா 160 சதுரடி | | | | | |
| | கடை எண்.1 | 7525 | A.தேவராஜன் | - | 7597 | 7597 |
| | கடை எண்.2 | 6700 | M.தமிழ்செல்வி | 6750 | - | 6750 |

| வ. எண் | வணிக வளாகங்கள் | கடந்த ஏல உயர்ந்தப்பட்ச கோரிக்கை .ரூ | ஏலதாரர் பெயர் | 8-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| 2. | வார்டு எண். 24ல் மேற்கு ஆரோக்கியசாமி சாலையில் வடக்கு பகுதியில் புதிதாக கட்டப்பட்ட (10 x 16 =160 சதுரடி | | | | | |
| | கடை எண்.7 | 14000 | M.ஹரிபிரசாத்<br>K.G.விஜய்<br>M.M.சிவக்குமார் | 19200<br>- | 18999<br>17600<br>15220 | 19200 |
| | கடை எண்.12 | 13600 | S.K.ஞானாம்பிகை<br>C.R..கிருஷ்ணவேணி | - | 17600<br>13600 | 17600 |

வரிசை எண்.1-ல் உள்ள இனத்திற்கு 13.08.2014-ம் தேதி நடைபெற்ற 3-வது ஏலத்தில் கடை எண்.1-ற்கு அரசு மதிப்பு ரூ.7525/-ஐ விட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.7597/-ற்கு A.தேவராஜன் என்பவர் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண்.1-ல் உள்ள இனத்திற்கு 13.08.2014-ம் தேதி நடைபெற்ற 3-வது ஏலத்தில் கடை எண்.2-ற்கு அரசு மதிப்பு ரூ.6700/-ஐ விட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.6750/-ற்கு M.தமிழ்செல்வி என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண்.2-ல் உள்ள இனத்திற்கு 23.7.2014-ம் தேதி நடைபெற்ற 9-வது ஏலத்தில் கடை எண்.7-ற்கு அரசு மதிப்பு ரூ.17320/-ஐ விட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.19200/-ற்கு திரு. M.ஹரிபிராசத் என்பவர் மின்ஏலம் கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண். 2-ல் உள்ள இனத்திற்கு 23.07.2014-ம் தேதி நடைபெற்ற 9-வது ஏலத்தில் கடை எண். 12-ற்கு அரசு மதிப்பு ரூ.17020/-ஐ விட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.17600/-ற்கு திருமதி.S.K.ஞானாம்பிகை என்பவர் மின்ஏலம் கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

எனவே மேற்படி உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரிய கடைகளை ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிகுழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.104 நாள்.20.8.2014-ன்படி அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.12374/2013/அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 226 நாள் 25.08.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 18**

பொருள் பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – **13.11.2014** முதல் **15.11.2014** முடிய குஜராத்தில் நடைபெறும் Sustainable Build Environment & Good Urban Governance ஆணையாளர் அவர்கள் கலந்து கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோருதல் தொடர்பாக.

பார்வை இணை செயலாளர், Ministry of Urban Development அவர்களின் கடித நாள். **03.04.2014 (**இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்**.04.08.2014)**

————————

பார்வையில் காணும் கடிதத்தில், குஜராத் மாநிலத்தில் **13.11.2014** முதல் **15.11.2014** வரை "Sustainable Build Environment & Good Urban Governance" மாநாடு நடைபெற உள்ளதாகவும், இதில் ஆணையாளர் அவர்கள் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட மாநாட்டில் ஆணையாளர் அவர்கள் கலந்து கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டியும், மாமன்ற அனுமதிக்குப் பின்னர் அரசின் அனுமதி பெற கருத்துரு அனுப்பவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கலாம். ந.க.எண்**.109/2011/**எம்.சி.**6**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 227 நாள் 25.08.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 19**

பொருள் பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – அக்டோபர் 2014 ல் அகமதாபாத்தில் நடைபெறும் Learn about Planning and design of bus raid transit systems and non motorised Transport facilities ஆணையாளர் அவர்கள் கலந்து கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோருதல் தொடர்பாக.

பார்வை மண்டல இயக்குநர், (இந்தியா & தெற்கு ஆசியா) Institute of Transportation and Development Policy அவர்களின் கடித எண் ITDP/TN/CMA/2014-15/007 நாள். **12.08.2014**

————————

பார்வையில் காணும் கடிதத்தில், அக்டோபர் 2014 ல் அகமதாபாத்தில் நடைபெறும் Learn about Planning and design of bus raid transit systems and non motorised Transport facilities தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற உள்ளதாகவும், இதில் ஆணையாளர் அவர்கள் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பயணத்திற்கான அனைத்து செலவினங்களைணும் ITDP ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட மாநாட்டில் ஆணையாளர் அவர்கள் கலந்து கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டியும், மாமன்ற அனுமதிக்குப் பின்னர் அரசின் அனுமதி பெற கருத்துரு அனுப்பவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கலாம். ந.க.எண்.109/2011/எம்.சி.6

**மாநகர மன்ற தீர்மானம் எண் 228 நாள் 25.08.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 20

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 4107/ 2014/ எம்.டி.4 | மாநகராட்சி வெள்ளலூர் குப்பை கிடங்கு RAF விடுதிக்கு அருகே சுற்றுச்சுவர் அமைத்தல் | 74.85 | 14.08.2014 முதலாம் அழைப்பு | 1.திரு. ஜே. ராபர்ட் ராஜா கோயம்புத்தூர் 5.86% அதிகம்<br>2. தி.ள். கே.சி.பி. இன்ஜினியரிஸ் பி.லிட் கோயம்புத்தூர் 4.99% | தி.ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பி.லிட் கோயம்புத்தூர்<br>4.89% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 2 | 4106/ 2014/ எம்.டி.4 | மாநகராட்சி வெள்ளலூர் குப்பை கிடங்கு நுழைவாயில் அருகே சுற்றுச்சுவர் அமைத்தல் | 74.10 | 14.08.2014 முதலாம் அழைப்பு | 1.திரு. ஜே. ராபர்ட் ராஜா கோயம்புத்தூர் 5.86% அதிகம்<br>2. தி.ள். கே.சி.பி. இன்ஜினியரிஸ் பி.லிட் கோயம்புத்தூர் 4.99% | தி.ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பி.லிட் கோயம்புத்தூர்<br>4.90% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

இப்பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும்; இப்பணிக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிகு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்

**ந.க.எண். 4107**/2014/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 229 நாள் 25.08.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 21

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 5091/ 2014/ எம்.டி.4 | கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட நொய்யல் ஆற்றின் பக்கவாட்டில் தடுப்புச்சுவர் கட்டுதல் பணி | 74.93 | 21.08.14 முதல் அழைப்பு | 1.தி/ள்.கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பி லிட் 4.99 % அதிகம் 2. திரு.பி. செந்தில் அன் கோ. 5.59 % அதிகம் | 1.தி/ள்.கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பி லிட் 4.98 % அதிகம் விலை குறைப்பிற்கு பின் |
| 2 | 4973/ 2014/ எம்.டி.4 | கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட செல்வபுரம் புறவழிச் சாலையில் இருந்து தெற்கே நொய்யல் ஆறுவரை தார்சாலை மேம்படுத்துதல் பணி | 72.90 | 21.08.14 முதல் அழைப்பு | 1.தி/ள்.கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பி லிட் 4.99 % அதிகம் 2. பி. செந்தில் அன் கோ. 6.35 % அதிகம் | 1.தி/ள்.கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பி லிட் 4.98 % அதிகம் விலை குறைப்பிற்கு பின் |

மேலும், மேற்காண் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

இப்பணிகளுக்கு குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிகளுக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 5091/2014/எம்.டி.4**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 230 நாள் 25.08.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 22

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி – எல்காட் - சிறப்பு பொருளாதார மண்டலம் - விளாங்குறிச்சி கிராமம் க.ச.எண்.426/1, 426/2, 427/1, 436, 437, 438, 439/1, 440, 458/2, 459/2, 461/3, 462/4, 463/4, 465/4, 466/4 – பகுதியில் 61.59 ஏக்கர் - திருத்திய மனைப்பிரிவு உத்தேசம் - பொது ஒதுக்கீடு இடம் பரிவர்த்தனை – தமிழக அரசு உயர்மட்ட குழு கூட்ட நடவடிக்கைகள் நாள்.23.08.2014 – அரசு செயலர் (தகவல் தொழில் நுட்பவியல் துறை) தலைமைச் செயலகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.1863/IT (B3)/2014 நாள்.23.08.2014 - கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் மூலம் இசைவு தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை-

1. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் தமிழக அரசு எல்காட் நிறுவனம் - மனைப்பிரிவு அனுமதி ந.க.எண்.14866/2007/LA2 நாள்.31.08.2007 – மனைப்பிரிவு அனுமதி எண். 119/2007 (உறுப்பினர் செயலலர், உள்ளூர் திட்டக் குழுமம், கோவை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.2361/2007/உதிகு-1, திட்ட அனுமதி எண்.242/ 2007 நாள்.01.10.2007.
2. நிர்வாக இயக்குநர், எல்காட், தமிழக அரசு நிறுவனம் அவர்கள் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பித்த திருத்திய மனைப்பிரிவு உத்தேசம்.

3. அரசு முதன்மை செயலர் (வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை) தலைமைச் செயலகம், சென்னை அவர்களின் தலைமையில் 22.08.2014-ல் நடைபெற்ற உயர்மட்ட குழு கூட்ட நடவடிக்கைகள்.
4. அரசு செயலர் (தகவல் தொழில் நுட்பவியல் துறை) தலைமைச் செயலகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.1863/IT (B3) / 2014 நாள்.23.08.2014.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி, விளாங்குறிச்சி கிராமம் க.ச.எண்.426/1, 426/2, 427/1, 436, 437, 438, 439/1, 440, 458/2, 459/2, 461/3, 462/4, 463/4, 465/4, 466/4 – பகுதியில் 61.59 ஏக்கர் பரப்பளவில் தமிழக அரசு நிறுவமான எல்காட் நிறுவனத்திற்கு சிறப்பு பொருளாதார மண்டலத்தில் மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்டது.

நிர்வாக இயக்குநர், எல்காட் நிறுவனத்தால் தற்சமயம் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு திருத்திய மனைப்பிரிவு உத்தேசம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் பொருள் தொடர்பாக அரசு முதன்மை செயலர் (வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை) தலைமைச் செயலகம், சென்னை அவர்களின் தலைமையில் 22.08.2014-ல்

1) அரசு முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை,
2) அரசு செயலர், தகவல் தொழில் நுட்பவியல் துறை,
3) எல்காட் நிர்வாக இயக்குநர், தமிழக அரசு, சென்னை
4) ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி
5) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை

ஆகியோர் கலந்துகொண்ட உயர்மட்ட குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிர்வாக இயக்குநர், எல்காட், அவர்கள் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பித்த திருத்திய மனைப்பிரிவு உத்தேசம் தொடர்பாக ஆலோசனை செய்யப்பட்டு வழிகாட்டுதல் முடிவுகள் வழங்கப்பட்டுள்ளது.

மேற்காண் உயர்மட்ட குழு கூட்டத்தில் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

1) கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு எல்காட் நிறுவனத்தால் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்ட பொது ஒதுக்கீடு, சாலை மற்றும் சாலை விரிவாக்க பகுதிகளுக்கு பதிலாக அதே நகரளவை எண்களில் மாற்று பொது ஒதுக்கீடு இடம் பரிவர்த்தனை செய்து கொள்வதற்கு ஆட்சேபனையின்மை தெரிவிக்கும் வகையில் மாமன்ற ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

2) தமிழக அரசின் எல்காட் நிறுவனத்தால் நகர் ஊரமைப்பு ஆணையருக்கு சமர்ப்பித்துள்ள திருத்திய மனைப்பிரிவு உத்தேசத்தில் பொருத்தமான பொது ஒதுக்கீடு இடம் (Open Space Reservation – OSR) 10 சதவீதத்திற்கும் குறைவில்லாத வகையிலும், தென்வடல் தண்ணீர்பந்தல் சாலையில் 60 அடி அகலத்தில் திட்டச்சாலை சாலை விஸ்தரிப்புக்கு தேவையான நிலப்பரப்பினையும் குறியீடு செய்து நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் எல்காட் நிறுவனத்தின் திருத்திய மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க வேண்டும்.

3) தமிழக அரசின் எல்காட் நிறுவனம், நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் உயர்மட்ட குழுவின் முடிவின்படி அங்கீகரிக்கப்பட உள்ள திருத்திய மனைப்பிரிவு வரைபடத்தில் கண்டுள்ளவாறு பொது ஒதுக்கீடு இடம் மற்றும் தென்வடல் தண்ணீர்பந்தல் சாலையில் 60 அடி அகலத்தில் திட்டசாலை விஸ்தரிப்புக்கு தேவையான நிலப்பரப்பினையும் பதிவு செய்யப்பட்ட தானபத்திரம் மூலம் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய வேண்டும். அதனை ஏற்றும், அதே சமயத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி எல்காட் நிறுவனம் ஏற்கனவே ஒப்படைப்பு செய்யப்பட்ட பொது ஒதுக்கீடு இடம் தொடர்பான தான பத்திரத்தை ரத்து செய்து எல்காட் நிறுவனத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.

அரசு முதன்மை செயலர், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அவர்கள் தலைமையிலான உயர்மட்ட குழுவின் முடிவின்படி தமிழக அரசின் எல்காட் நிறுவனம், நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் உயர்மட்ட குழுவின் முடிவின்படி அங்கீகரிக்கப்பட உள்ள திருத்திய மனைப்பிரிவு வரைபடத்தில் கண்டுள்ளவாறு பொது ஒதுக்கீடு இடம் மற்றும் தென்வடல் தண்ணீர்பந்தல் சாலையில் 60 அடி அகலத்தில் திட்டசாலை விஸ்தரிப்புக்கு தேவையான நிலப்பரப்பினையும் பதிவு செய்யப்பட்ட தானபத்திரம் மூலம் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்வதை ஏற்றுக் கொள்ளவும், அதே சமயத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி, எல்காட் நிறுவனத்தால் ஏற்கனவே ஒப்படைப்பு செய்யப்பட்ட பொது ஒதுக்கீடு இடம் தொடர்பான தான பத்திரத்தினை ரத்து செய்து எல்காட் நிறுவனத்திற்கு ஒப்படைப்பு செய்வதற்கும் கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- அனுமதி வழங்கலாம். ந.க.எண்.929/ 2013/ எச்.1(கி)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 231 நாள் 25.08.2014**

அனுமதிக்கப்பட்டது

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

**பொருள் எண் 23**

பொருள்: சிக்னல் பராமரிப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – கோவை மாநகரில் உள்ள தானியங்கி சிக்னல்களை பராமரிப்பு செய்ய ஒப்பந்த புள்ளி கோருவதற்கு மாமன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை: **1.**மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற மாவட்ட சாலை பாதுகாப்பு குழு கூட்ட நடவடிக்கைகள் நாள்.**26.02.2014.**
**2.**கோவை மாநகர காவல் ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.டபள்யூ**3/29927/2014**, நாள்.**15.07.2014.**

*******

பார்வை **1**ல் கண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்ற சாலை பாதுகாப்பு குழு கூட்டத்தில், கோயம்புத்தூர் மாநகர காவல்துறை எல்லைக்குள் அமைந்துள்ள தானியங்கி சிக்னல்களை பராமரிக்க கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் மூலம் பொது டெண்டர் வழங்கி சிக்னல் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் மற்றும் அதில் விளம்பரம் செய்து அதில் கிடைக்கும் வருவாயினை கோயம்புத்தூர் மாநகர போக்குவரத்து மேம்பாட்டிற்கு பயன்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் பார்வை **2**ல் கண்ட கடிதத்தில் கோவை மாநகர காவல் ஆணையர் சிக்னல்களை பராமரிக்க ஒப்பந்த புள்ளி கோர உரிய மேல் நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் மேற்கண்ட சிக்னல்களை பராமரிக்க கோயம்புத்தூர் மாநகராட்சியின் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க.எண்.**10171/2012**/எம்.எச்.**5**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 232 நாள் 25.08.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**(ஒப்பம்) சு. லீலாவதி உண்ணி**
**மேயர் (பொறுப்பு)**
கோயம்புத்தூர் மாநகராட்சி